FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8348039

1. District : Thiruvallur மாவட்டம் PS: Ungikaran & Anti Corruption காவல்நிலையம் Year: 2025 ஆண்டு FIR No.: 11/AC/2025 முத.அ. எண் Date: 26.09.2025 நாள் at about 15:15 Hrs

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : 106 BNSS r/w 7 & 12 of the Prevention of Corruption (Amendment) Act 2018

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 26.09.2025 Date to : நாள் வரை

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை 02.00 Hrs to 13.00 Hrs

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 26.09.2025 Time : நேரம் 15.00 Hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 26.09.2025 Time : நேரம் 15.15 Hrs

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் North East - About 60 KMS

Beat Number : முறைக் காவல் எண்

(b) Address : முகவரி Pethikuppam Modern Integrated RTO Check Posts, Elavur.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் P. Kamalakannan (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Poruran

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 43 Yrs (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் Zonal Deputy Tahsildar Kanchipuram (g) Address : முகவரி O/o District Deputy Inspection Cell officer, Kanchipuram, Thiruvallur and Chengalpattu District, Kanchipuram

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
A-1 Tr. D. Rajan, MVI (NT), Out Going Check Post Modern Integrated RTO Check Post, Elavur, Thiruvallur District. A-2 Tr. M. Kumar, MVI (NT) Incoming Check Post, Pethikuppam A-3 Tr. S. Tamil Selvan S/o Siva Prakasam Perambur, Chennai (Private Individual)

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

Seized un-accounted unclaimed and un-explained money of Rs. 5,44,500/- during Joint Surprise check, Pethikuppam, Modern Integrated RTO Check Post, Thiruvallur District.

9. Particulars of properties stolen / Involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / Involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு — NIL —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு என் ஏதேனும் இருந்தால் — NIL —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்படுகிறது.
இன்று 26.09.2025-ந் தேதி காலை 15.15 மணிக்கு
P.S. நகிடிரி, காவல் ஆய்வாளராகிய நான், நிலைய அலுவலில் இருந்த
போது, காவல் தலை காணிகாணியாளர், உலகில் நடுவு மாநிலம் கணிமாணிவு
பிரிவு, திராணிவேப்பேட்டை, பொருவு நிருவனிலர் அவரிகள் என்னை அணுகி,
நிறு. யோ. கமலிகண்ணன், மணிமல தலை வட்டாட்சிமர், காஞ்சிபுரம்,
பொருவு மாவட்ட தலை ஆணையிடு அலுவர், காஞ்சிபுரம், வெளிநிறுவு
மாநிலம் நிருவனிலர் காவல்துறை, காஞ்சிபுரம் எனிபவர் கொடுத்த
புகாரை பெற்று அதன்மேல் வழக்கு பதிவு செய்ய எனக்கு அளித்த
உத்தரவின்மேல் பதிவு செய்த அறிவுகாரின் விவரம் வருமாறு.

(FIR Content Continues to the next Page ....)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed H.C. [illegible] Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....[illegible].....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .....காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் on 26/9/2025 at about 16:30hrs

Name: பெயர் [illegible]
Rank: நிலை [illegible]

(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.11/AC/2025/TVL U/s. 106 BNSS., r/w. 7 & 12 of the Prevention of Corruption (Amendment) Act - 2018 Continuous...)

அனுப்புநர் போ.கமலக்கண்ணன், மண்டல துணை வட்டாட்சியர், காஞ்சிபுரம். & மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், காஞ்சிபுரம், செங்கற்பட்டு & திருவள்ளூர் மாவட்டங்கள், காஞ்சிபுரம். பெறுநர் திரு.V.கணேசன், காவல் துணை கண்காணிப்பாளர், இராணிப்பேட்டை. (பொறுப்பு) திருவள்ளூர் ந.க.எண்.319/**2025/I-1**, நாள்-26.**09.2025**. அய்யா, பொருள்:- திடீர் கூட்டாய்வு - மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் - ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு பெத்திக்குப்பம் நவீன ஒருங்கிணைப்பு சோதனைச்சாவடிகளை 26.09.2025-ந்தேதி இரு துறை திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது - தொடர்பான நடவடிக்கை எடுக்கக்கோரி - கடிதம் - அளித்தல் சம்மந்தமாக. **பார்வை:-** திடீர் கூட்டுத்தணிக்கை செயல்முறைகள், நாள்- 26.09.2025, திருவள்ளூர் மாவட்டம், பெத்திக்குப்பம் நவீன ஒருங்கிணைப்பு சோதனைச்சாவடிகளை கடந்து செல்லும் வாகனங்களின் ஓட்டுநர்கள் மற்றும் உரிமையாளர்களிடம் தனி நபர்கள் மூலம் லஞ்சமாக அதிகப்படியான பணம் வசூலிப்பதாக தொடர்ந்து மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கற்பட்டு மாவட்டங்கள், இருப்பு காஞ்சிபுரம் அவர்களுக்குச் திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அதிகாரிகளுக்கும் கிடைத்த நம்பகமான தகவலின் அடிப்படையில், இன்று 26.09.2025-ந்தேதி மேற்படி இரண்டு சோதனை சாவடிகளையும், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலரான என் தலைமையில், திருவள்ளூர் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் அவரது குழுவினருடன் சேர்ந்து இரு துறை திடீர் கூட்டாய்வு, இன்று 26.09.2025-ந்தேதி அதிகாலை 02.00 மணிமுதல் 13.00 மணிவரை மேற்கொள்ளப்பட்டது. இந்த சோதனையின்போது மேற்குறிப்பிட்ட இரண்டு சோதனைச்சாவடிகளிலும், யாரும் உரிமைக்கோராத மற்றும் கணக்கில் வராத பணம் ரூ.5,44,500/- கைப்பற்றப்பட்டது. மேற்படி பணமானது இரண்டு சோதனை சாவடிகளிலும் பணியிலிருந்த மோட்டார் வாகன ஆய்வாளர்களான (தொ.நு.அ) திரு.ராஜன், திரு.குமார் ஆகியோர்கள் பொது ஊழியர்களாக இருந்துக்கொண்டு, தனி நபர்களை வேலைக்கு வைத்துக்கொண்டு, அவர்கள் மூலம் மேற்படி சோதனை சாவடிகளுக்கு வரும் வெளிமாநிலங்களுக்குச் செல்லும் மற்றும் வெளி மாநிலங்களிலிருந்து வரும் வாகனங்களின் உரிமையாளர்கள் மற்றும் ஓட்டுநர்களிடமிருந்து சட்டப்படியாக வசூலிக்க வேண்டிய அரசு கட்டணத்தை வசூலிக்காமல் இருக்க லஞ்சமாக பணத்தை தனி நபரான திரு.தமிழ்ச்செல்வன், த/பெ.சிவப்பிரகாசம், பெரம்பூர், சென்னை அவர்கள் மூலமும் இன்னும் சில இடைத்தரகர்கள் மூலமும் லஞ்சமாக பெறும் மேற்படி நபர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். SddXXX(**போ.கமலக்கண்ணன்**), மண்டல துணை வட்டாட்சியர், காஞ்சிபுரம், & மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், காஞ்சிபுரம், செங்கற்பட்டு & திருவள்ளூர் மாவட்டங்கள், காஞ்சிபுரம். **இணைப்பு** - 1) ரொக்கம் ரூ. 5,44,500/- (நான்கு லட்சத்து ஐம்பத்தி நான்காயிரத்து ஐநூறு ரூபாய்), 2) செயல்முறை ஆணை அசல், 3) பணம் கைப்பற்றப்பட்ட

(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.11/AC/2025/TVL U/s. 106 BNSS., r/w. 7 & 12 of the Prevention of Corruption (Amendment) Act 2018 Continuous...)

நபர்கள் மற்றும் அலுவலர்களின் வாக்குமூலங்கள் மற்றும் விளக்கக்கடிதங்கள். 4) திடீர் சோதனையின் போது இரண்டு சோதனைச்சாவடிகளின் வருகைப்பதிவேடுகள், பண கையிருப்பு பதிவேடுகள் மற்றும் வசூல் செய்யப்பட்ட சாலை வரிகளின் விவரம் அடங்கிய பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல்களை சான்றொப்பமிடப்பட்டு கைப்பற்றப்பட்ட ஆவணங்கள். மேற்படி கடிதத்தில் காவல் துணை கண்காணிப்பாளரால் என்னை வழக்கு பதிவு செய்ய அனுமதித்து கையொப்பம் செய்துள்ளதும் அது என்னால் ஒப்புதல் பெற்றதும் அடங்கியது. மேலும், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலரால் தயார் செய்யப்பட்ட இரு துறை திடீர் கூட்டுச்சோதனை தொடர்பான செயல்முறையின் விவரம் வருமாறு- காஞ்சிபுரம், மண்டல துணை வட்டாட்சியர், கூடுதல் பொறுப்பு காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் (இருப்பு) காஞ்சிபுரம் அவர்களின் தலைமையில் மற்றும் காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவள்ளூர் மாவட்டம் (பொறுப்பு) அவர்களின் உதவியுடன் பெத்திகுப்பம் நவீன ஒருங்கிணைந்த சோதனை சாவடிகளில் மோட்டார் வாகன ஆய்வாளர் (தொழில் நுட்பம் அல்லாத) அலுவலகத்தில் உள்வருகை மற்றும் வெளிச்செல்லுதல் சோதனை சாவடியில் வாகன ஓட்டுநர்கள் மற்றும் உரிமையாளர்களிடம் இருந்து லஞ்சம் பெறுவதாக தொடர்ந்து கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இன்று 26.09.2025 ஆம் தேதி அதிகாலை சுமார் 02.00 மணியளவில் பெத்திக்குப்பம் வெளிச்செல்கை மற்றும் உள்வருகை சோதனை சாவடிகளில் மேற்கொள்ளப்பட்ட திடீர் கூட்டுச்சோதனை குறித்த நடவடிக்கைகள் பின்வருமாறு,

துறை தலைமை அலுவலர்	போக்குவரத்து ஆணையர், சேப்பாக்கம், சென்னை-05
உள்வருகை ஆய்வின்போது கலந்து கொண்டவர்கள்	1. திரு.போ.கமலகண்ணன், மண்டல துணை வட்டாட்சியர், காஞ்சிபுரம், பொறுப்பு துணை ஆய்வுக்குழு அலுவலர், காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்கள், காஞ்சிபுரம்.
	2. திரு.வி.கணேசன், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, இராணிப்பேட்டை மாவட்டம். (பொறுப்பு) திருவள்ளூர் மாவட்டம்
	3. திருமதி.தமிழரசி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு திருவள்ளூர் மாவட்டம்

(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.11/AC/2025/TVL U/s. 106 BNSS., r/w. 7 & 12 of the Prevention of Corruption (Amendment) Act - 2018 Continuous...)

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிபூண்டி வட்டம், சென்னையிலிருந்து வெளி மாநிலம் நோக்கி செல்லும் பெத்திக்குப்பம் நவீன ஒருங்கிணைப்பு மோட்டார் வாகன சோதனை சாவடி, எளாவூரில் இன்று 26.09.2025 ம் தேதி அதிகாலை சுமார் 02.00 மணிக்கு திரு.போ.கமலகண்ணன், மண்டல துணை வட்டாட்சியர், காஞ்சிபுரம், பொறுப்பு துணை ஆய்வுக்குழு அலுவலர் அவர்களின் தலைமையில், திருவள்ளூர் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர், காவல் ஆய்வாளர் அவர்களது குழுவினருடன் இணைந்து திடீர் கூட்டு சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி திடீர் கூட்டு சோதனையின்போது பெத்திக்குப்பம் வெளிசெல்கை சோதனை சாவடியில் சாவடி எண்.1-ல் திரு.தினேஷ்குமார், த/பெ. வெங்கடேசன், நெ.2, வரதப்பன் தெரு, ஒலிமுகமதுபேட்டை, காஞ்சிபுரம் மாவட்டம் என்பவரும், சாவடி எண்.2, 3 மற்றும் 4 ஆகியவை மூடியிருந்தன. சாவடி எண்.4-ன் வெளியில் 6 நபர்கள் இருந்தனர். அவர்களை விசாரிக்க அவர்கள் தங்களை கீழ்கண்டவாறு அறிமுகப்படுத்திக்கொண்டனர், 1) திருமதி.S.சத்யா, உதவியாளர், 2) திரு.N.சிவராஜ், அலுவலக உதவியாளர் என்றும் 3) திரு.பூபதி, த/பெ. வெங்கடரத்தினம், நெ.755, 9வது தெரு, இரண்டாவது குறுக்கு, சர்மா நகர், சென்னை, 4) திரு.முருகன், த/பெ.சுப்ரமணி, நெ.16, பயனர் தெரு, நேரு நகர், வாலாஜாபாத், காஞ்சிபுரம் மாவட்டம், 6) திரு.தமிழ்செல்வன், த/பெ.சிவபிரகாசம், நெ.26/55, வாக்கிங்ஸ் தெரு, செம்பியம், சென்னை-11 7) திரு.துர்காச்சலம், த/பெ.ராஜ் முதலியார், நெ.12, ஜீவா 2வது தெரு, புழல் காவாங்கரை, சென்னை-66 ஆகியோர் தங்களை மோட்டார் வாகன ஆய்வாளர் தற்காலிகமாக பணியமர்த்தியுள்ளதாகவும் அதற்கு பணி ஆணை ஏதும் இல்லையென்றும் கூறினர். அவர்களை அங்கிருந்து மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்கு அழைத்துக்கொண்டு வரும்போது மோட்டார் வாகன ஆய்வாளர் எங்கே என்று விசாரித்ததற்கு, சோதனை சாவடி அலுவலகத்தின் வலதுபுறத்தின் சீருடையின்றி அமர்ந்துக்கொண்டிருந்த நபரை காண்பித்து அவர்தான் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.ராஜன் என கூறினர். பின்னர் அவரிடம் எங்களை

(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.11/AC/2025/TVL u/s 106 BNSS., r/w. 7 & 12 of the Prevention of Corruption (Amendment) Act 2018 Continuous...)

அறிமுகப்படுத்திக்கொண்டு விசாரிக்க, அவர் தன்னுடைய பெயர் திரு.D.ராஜன் என்றும் தான் மோட்டார் வாகன ஆய்வாளராக (தொழில்நுட்பம் அல்லாத) பணிபுரிவதாகவும், தான் கடந்த 17.07.2025 ஆம் தேதி முதல் எளாவூர் சோதனை சாவடியில் பணிபுரிந்து வருவதாகவும் சொன்னார். பின் ஆய்வுக்குழுவில் உள்ள அனைவரும் தங்களுடைய உடைமைகளை மோட்டார் வாகன ஆய்வாளர், உதவியாளர் மற்றும் அனைவரிடமும் சுயசோதனை செய்துக்காட்டி அலுவலக சோதனையை ஆரம்பித்து அலுவலகம் மற்றும் சோதனை சாவடிகள் முழுவதும் சோதனை செய்தோம். அப்போது, திரு.ராஜன், மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களை விசாரிக்க, தான் 25.09.2025 ஆம் தேதி காலை 08.00 முதல் இரவு 08.00 மணி வரை உள்வருகை சோதனை சாவடியிலும், பின்னர் இரவு 08.00 மணிமுதல் மறுநாள் 26.09.2025-ந்தேதி காலை 08.00 மணிவரை வெளிச்செல்கை சோதனை சாவடி பணி என்றும் தெரிவித்தார். பின்னர், அவர் பணியிலிருந்த நேரத்திற்கான வசூல் குறித்து விசாரித்தபோது, 25./09.2025-ந்தேதி காலை 08.00 மணிமுதல் இரவு 08.00 மணிவரை அப்போது பணியிலிருந்த மோட்டார் வாகன ஆய்வாளர் (தொழில் நுட்பம் அல்லாத) திரு.முருகேசன் என்பவர் வசூல் செய்த தொகை ரூ.1,51,868/-னை என்னிடம் ஒப்படைத்த பணமும், இரவு 08.00 மணிமுதல் மறுநாள் 02.00 மணிவரை ரூ.82,602/- பணம் 1-வது சாவடியில் (வரிசை எண்.1 முதல் 16 வரை) வசூல் செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டு அதுதொடர்பான விவரத்தை கணினியிலிருந்து பதிவிறக்கம் செய்து கொடுத்தார். மேற்படி தொகையை கணக்கிட்டு பார்த்ததில் மொத்தம் ரூ.2,34,470/- பணம் சரியாக இருந்தது. மேற்படி தொகையை அரசு கணக்கில் செலுத்த அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. பின்னர் மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்கள் எடுத்துக்கொடுத்த வசூலான வரித்தொகையின் பதிவிறக்கம் செய்த நகலினை மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களால் சான்றொப்பமிடப்பட்டு கைப்பற்றப்பட்டது. பின்னர், இத்திடீர் கூட்டுத்தணிக்கையின்போது கண்டெடுக்கப்பட்ட பணத்தின் விவரம் வருமாறு-

வ.எண்.	யாரிடமிருந்து/எங்கிருந்து பணம் கண்டெடுக்கப்பட்டது	பணத்தின் விவரம்
1.	சாவடி எண்.4-ல் இருந்த அட்டை பெட்டியில்	ரூ.15,700/- (500x11, 200x39, 100x13 50x18, 20x7, 10x6)
2.	சாவடி எண்.5-ல் பெரிய கருப்பு நிற கிழிந்த file-னின் உட்பகுதியில்	ரூ.29,800/- (500x41, 200x29, 100x34 50x2)
3.	சாவடி எண்.3 அருகே ஒரு நீல நிற பாலிதீன் கவரில்	ரூ.16,700/- (500x32, 100x6, 50x2)

(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.11/AC/2025/TVL U/s. 106 BNSS., r/w. 7 & 12 of the Prevention of Corruption (Amendment) Act - 2018 Continuous...)

4.	சோதனைச்சாவடி அலுவலகத்திற்கு வலது புறம் அதாவது திரு.ராஜன் அவர்கள் படுத்துக்கொண்டிருந்த திண்ணை போன்ற இடத்தின் அருகே	ரூ.11,700/- (500x23, 100x1, 50x2)
5.	சோதனைச்சாவடி அலுவலகத்திற்கு எதிரேயிருந்த அறையில் ஒரு செய்தித்தாளில் சுற்றி வைக்கப்பட்டிருந்த பணம்	ரூ.18,500/- (500x22, 200x16, 100x40, 50x6)
6.	திரு.ராஜன் அவர்கள் பயன்படுத்தும் இனோவா கிரிஸ்டா வெள்ளை நிற காரில் சோதனை செய்தபோது அதன் டேஷ் போர்டில்	ரூ.1,21,230/- (500x211, 200x55, 100x23, 50x45, 20x7, 10x4)
மொத்தம்		ரூ.2,13,630/-

மேற்படி பணம் ரூ.2,13,630/- குறித்து திரு.ராஜன், மோட்டார் வாகன ஆய்வாளர் (தொ.நு.அல்லாத) அவர்களிடமும், அவருடன் பணியிலிருந்த உதவியாளர் திருமதி. சத்யா மற்றும் அலுவலக உதவியாளர் திரு.சிவராஜ் மற்றும் திரு.ராஜன் அவர்களுக்கு உதவியாக இருந்த மற்ற பணியாளர்களிடம் மேற்படி பணம் குறித்து விசாரித்தபோது, அப்பணம்பற்றி தங்களுக்கு எதுவும் தெரியாது என்றும், எப்படி வந்தது என்றும் தெரியவில்லை என்று தெரிவித்தனர். அதனால் அப்பணம் வாகன ஓட்டிகள் மற்றும் உரிமையாளர்களிடம் லஞ்சமாக பெற்று வைத்துள்ள பணம் என முடிவு செய்து கைப்பற்றினேன். மேலும், திரு.ராஜன் அவர்கள் பணிக்கு வரும்போது, அவரது நண்பர் திரு.ஜெகதீஷ் என்பவரின் கார் எண். TN 05 CW 4777-Innova Cresta-white என்றும் அவர், மெட்ரோ டிரைன்னில் பீமாஸ் புட்ஸ் என்ற பெயரில் கேன்டின்களை எடுத்து நடத்திவருபவர் என்றும், தான் வேலைக்கு வந்து செல்ல பூபதி என்ற ஓட்டுநருடன் காரை அனுப்புவதாக தெரிவித்தார்.

மேலும், மேற்படி ஆஜரிலிருந்தவர்களை சோதனை செய்ததில், அதன் விவரம் வருமாறு-

வ. எண்.	யாரிடமிருந்து/எங்கிருந்து பணம் கண்டெடுக்கப்பட்டது	பணத்தின் விவரம்	பணத்திற்கான காரணம், அதன் முடிவு
1.	திரு.குமார், த/பெ. வெங்கடேசன், எண்.11 ரெட்டியார் தெரு, பெத்திக்குப்பம் கிராமம், தேர்வழி அஞ்சல், கும்முடிப்பூண்டி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம். (தனி நபர்)	ரூ.1,310/- (100x11, 200x1, 10x1)	மேற்படி பணம் அன்றைய நாளுக்கான கூலியாக திரு.ராஜன் அவர்கள் முன்னதாகவே கொடுத்தப்பணம் என்று கூறியதால் அப்பணத்தை கைப்பற்றப்பட்டது.

(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.11/AC/2025/TVL U/S 106 BNSS., r/w. 7 & 12 of the Prevention of Corruption (Amendment) Act 2018 Continuous...)

2.	திரு.முருகன். த/பெ. சுப்பிரமணி எண்.6, பயனியர் தெரு. நேரு நகர். வாலாஜாபாத். காஞ்சிபுரம் மாவட்டம். (தனி நபர்)	ரூ.2,010/- (500x2, 100x10, 10X1) மேற்படி பணம் அவருடைய பேண்ட் பாக்கெட் மற்றும் பர்சிலிருந்து கண்டெடுக்கப்பட்டது.	விளக்கம் குறித்து கேட்டபோது, காலையிலிருந்தே அவரது நண்பரான திரு.ராஜன் அவர்களுடன் பணியிலிருந்து வாகனங்களை மடக்கி விட்டதற்கு கூலியாக கொடுத்த பணம் என தெரிவித்தார். அதனால் அப்பணம் லஞ்சப்பணம் என்பதால் கைப்பற்றப்பட்டது.
3.	திரு.பூபதி. த/பெ. வெங்கட் ரத்தினம், எண்.755, 9-வது தெரு, எஸ்.ஏ. காலனி, வியாசர்பாடி. சென்னை-39. (தனி நபர்)	ரூ.2,050/- (500x1, 100x6, 50X19) மேற்படி பணம் அவரது பேண்ட்டின் வலது பக்க பாக்கெட்டில் இருந்தது.	மேற்படி பணமானது இன்றைய தேதியில் திரு.ராஜன் அவர்களிடமிருந்து பெறப்பட்ட கூலிப்பணம் என கூறியதால், அப்பணத்தை துணை ஆய்வுக்குழு அலுவலர் அவர்களால் கைப்பற்றப்பட்டது.
4.	திரு.D.ராஜன். மோட்டார் வாகன ஆய்வாளர் (தொ.நு.அ)	அவரிடமிருந்து பணம் எதுவும் இல்லை.	அவரது காரிலேயே வைத்திருந்ததாக தெரிவித்தார்.
5.	திருமதி.P.சத்தியா. உதவியாளர்.	ரூ.900/- பணம் அவரது கைப்பையில் இருந்தது.	மேற்படி பணம் குறித்து கேட்டபோது வீட்டிலிருந்து செலவிற்காக கொண்டுவந்தது என்று கூறியதால், அலுவலக பண கையிருப்பு பதிவேட்டில் ரூ.1,100/- என பதிவு செய்யப்பட்டிருந்ததால், அப்பணத்தை திருப்பி அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.
6.	திரு.சிவராஜ். அலுவலக உதவியாளர்	ரூ.620/- பணம் அவருடைய பர்சில் வைத்திருந்தார்.	மேற்படி பணம் குறித்து கேட்டபோது வீட்டிலிருந்து செலவிற்காக கொண்டுவந்தது என்று கூறியதால், அலுவலக பண கையிருப்பு பதிவேட்டில் ரூ.620/- ஏன பதிவு செய்யப்பட்டிருந்ததால், அப்பணத்தை திருப்பி அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.
7.	திரு.தமிழ்ச்செல்வன். தனிநபர். பெரம்பூர். சென்னை.	பணம் எதுவும் இல்லை.	-
8.	திரு.துர்காச்சலம். புழல், சென்னை. தனிநபர்	ரூ.200/- பேண்ட் பாக்கெட்டிலிருந்து	மேற்படி நபர் கடந்த 10 வருடங்களாக டீ காபி வாங்கித்தரும் வேலையில் இருந்துவருவதாகவும், ரூ.1,000/- பணம் கூலியாக கொடுப்பதாகவும் தெரிவித்தார். மேற்படி பணம் டீ வாங்கிக்கொடுத்ததன் மீதிப்பணம் என்று தெரிவித்ததால் அப்பணத்தை திருப்பி அவரிடமே கொடுக்கப்பட்டது.
9.	திரு.தினேஷ் குமார், வரதப்பன் தெரு, ஒலிமுகமதுபேட்டை, காஞ்சிபுரம்.	பணம் எதுவும் இல்லை.	மேற்படி நபர் இச்சோதனைச்சாவடியில் சுமார் 11/2 வருடங்களாக ஒரு நாள் கூலி ரூ.1,000/-ற்கு வேலை செய்வதாக தெரிவித்தார்.
	மொத்தம்		ரூ.5,370/-

(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.11/AC/2025/TVL U/s. 106 BNSS., r/w. 7 & 12 of the Prevention of Corruption (Amendment) Act - 2018 Continuous...)

ஆக மொத்தம், ரூ.2,13,630/- மற்றும் ரூ.5,370/- சேர்த்து மொத்தம் பணம் ரூ.2,19,000/- (500X343, 200X141, 100X141, 50X95, 20X17, 10X11)-ஐ கணக்கில் வராத லஞ்சப்பணம் என முடிவு செய்து கைப்பற்றப்பட்டது. அதன்பின் வெளிச்செல்கை சோதனைச்சாவடியின் அலுவலர்களின் வருகைப்பதிவேட்டின் அக்டோபர்/2025-ற்கான நகலையும், பண கையிருப்பு பதிவேட்டின் நகலையும் திரு.ராஜன், மோட்டார் வாகன ஆய்வாளர் (தொ.நு.அ) வெளிச்செல்கை நவீன ஒருங்கிணைந்த சோதனைச்சாவடி, பெத்திக்குப்பம், ஏளாவூர், திருவள்ளூர் மாவட்டம் அவர்களிடம் சான்றொப்பம் பெற்று, அதில் துணை ஆய்வுக்குழு அலுவலரும் கையொப்பம் செய்து கைப்பற்றப்பட்டது. மேற்படி சோதனையின்போது, திரு.ராஜன் அவர்களின் இனோவா காரினை சோதனை செய்தபோது, ஒரு பாலிதீன் கவரில், உயர் வகை மதுபான (V.S.O.P-750 ml bottles) பாட்டில்களான, Hobsons XR-1, Black & Gold-2, Emperador-1 மற்றும் 100 Pipers என்ற 180 ml மதுபாட்டிலில் பாதி அருந்திவிட்டு மீதி அடங்கிய பாட்டில்-1 ஆகியவை டிக்கியில் வைக்கப்பட்டிருந்தது. அதனை குறித்துக்கொண்டு திருப்பி அவரிடமே கொடுக்கப்பட்டது. மேலும், சோதனையின்போது ஆஜரில் இருந்தவர்களின் அலுவலர்கள் மற்றும் தனிநபர்களை விசாரணை செய்து அவர்கள் தரப்பு விளக்கத்தை பதிவு செய்து அவரவர்களும், நானும் கையொப்பம் செய்யப்பட்டது. நானும் மேற்படி, இருதுறை திடீர் கூட்டுச்சோதனையை இன்று 26.09.2025-ந்தேதி அதிகாலை 02.00 மணிக்கு ஆரம்பித்து 05.30 மணிக்கு முடிக்கப்பட்டது. பின்னர், துணை ஆய்வுக்குழு அலுவலராகிய நானும், காவல் துணை கண்காணிப்பாளர் திரு.கணேசன் ஆகிய இருவரும், மேற்படி நவீன ஒருங்கிணைந்த சோதனைச்சாவடியின் உள்வருகை சோதனை சாவடிக்கு 05.45 மணியளவில் சென்றதில், ஏற்கெனவே எனது அறிவுரைப்படி, காவல் ஆய்வாளர் திருமதி.விஜியலட்சுமி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, இராணிப்பேட்டை மற்றும் குழுவினருடன் மேற்படி உள்வருகை சோதனைச்சாவடியை கண்காணித்து அவர்களை ஒரு இடத்தில் அமர வைத்திருக்குமாறு கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர்களும் அவ்வாறே இருந்தவர்களிடம் சென்று விசாரித்ததில், மேற்படி சோதனைச்சாவடியில் 1) திரு.M.குமார், வயது-48, த/பெ. மாணிக்கம், எண்.3/130, நேரு நகர், 7 வது குறுக்கு தெரு, கலெக்ட்ரேட் போஸ்ட், தர்மபுரி, தர்மபுரி மாவட்டம், மோட்டார் வாகன ஆய்வாளர் (தொழில் நுட்பம் அல்லாத) அவர்களும், 2) திரு.S.செழியன், வயது-36, த/பெ. செல்வராஜ், எண்.32, பூங்காவனம் தெரு, மணலி, சென்னை-68 உதவியாளர், 3)திரு.S.மனோஜ் குமார், வயது-41, த/பெ. சங்கர், எண்.7, சீனிவாச பெருமாள் கோவில் தெரு, முருகேசன் கார்டன், மாதாவரம், சென்னை, (தனிநபர்), 4) திரு.B.சிவக்குமார், வயது-45, த/பெ. பாலகிருஷ்ணன், எண்.20, வங்கி காலனி, 2வது தெரு, மாதாவரம், சென்னை (தனிநபர்), 5) திரு.D.ரமேஷ், வயது-49, த/பெ.துரை, எண்.1/69, பெருமாள் கோவில் தெரு, நரசிங்கபுரம்

(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.11/AC/2025/TVL U/s 106 BNSS., r/w. 7 & 12 of the Prevention of Corruption (Amendment) Act 2018 Continuous...)

கிராமம். கும்மிடிப்பூண்டி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம் (தனிநபர்) மற்றும் (1) திரு.C.V.அஜ்ஜூ, வயது-45, த/பெ. தாஸ், எண்.3, ராஜாஜி நகர், 7வது தெரு, வில்லிவாக்கம். சென்னை (தனிநபர்) ஆகியோர்கள் பணியிலிருந்தனர். மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலரான நான், மேற்படி சோதனை சாவடியில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குழுவினருடன் சேர்ந்து சோதனை செய்தபோது பணியில் இருந்த திரு.M.குமார், மோட்டார் வாகன ஆய்வாளர் (தொழில்நுட்பம் அல்லாத) அவர்கள் பணியில் இருந்தார். அவரை காவல் ஆய்வாளர் திருமதி.விஜயலட்சுமி அவர்கள் மூலமாக விசாரித்தபோது தான் கடந்த 07.07.2025-ம்தேதி முதல் மேற்கண்ட வாகன சோதனை சாவடியில் சுழற்சி முறையில் பணிபுரிவதாகவும், அதன்படி 25.09.2025 ஆம் தேதி மாலை 08.00 மணிமுதல் பணியில் இருந்து வருவதாகவும், தனக்கு உதவியாக அலுவலக உதவியாளர் திரு.S.செழியன் என்பவரும் தனிநபர்கள் மற்றும் 1)திரு.S.மனோஜ்குமார், 2) திரு.B.சிவக்குமார், 3) திரு.D.ரமேஷ், 4) திரு.C.V.அஜ்ஜூ ஆகியோர்கள் உள்ளனர் என்றும் தெரிவித்தார். தனிநபரான திரு.S.மனோஜ்குமார் என்பவர் தனக்கும், உதவியாளருக்கு பிற மொழி தெரியாததால் எங்களுக்கு உதவியாக பிற மொழி பேசும் வாகன ஓட்டுநர்களிடம் அவர்களின் மொழில் உரையாடி வாகனத்திற்கு தற்காலிக அனுமதி சீட்டு, இணக்க கட்டணம் மற்றும் பசுமை வரி வசூலிக்க உதவி புரிவார். இவருக்கு தின கூலியாக ரூபாய்.700/- கொடுத்து வருவதாக தெரிவித்தார். மேலும் சோதனை சாவடிக்கு அருகாமையில் டீ கடைகள் ஏதும் இல்லாததால் திரு.B.சிவக்குமார் அவர்களை இரவு நேர பணியின்போது டீ வாங்கி வருவதற்காக வைத்துள்ளதாகவும், மேலும், திரு.D.ரமேஷ், அவர்கள் திரு.சிவக்குமார் அவர்களுடன் துணையாக வந்ததாகவும் தெரிவித்தார். மேலும் மேற்படி இருவருக்கு தினமும் கூலியாக தலா ரூபாய்.500/- கொடுப்பதாக தெரிவித்தார். திரு.C.V.அஜ்ஜூ என்பவரை, உதவியாளர் திரு.செழியன் அவர்களின் சொந்த காரின் (TN 18 BM 7070- Hyundai Exter) acting ஓட்டுநராக அழைத்து வந்தாகவும், அவருக்கு தினமும் கூலியாக தலா ரூபாய்.500/- கொடுப்பதாக திரு.செழியன் அவர்கள் தெரிவித்தார். மேலும் அவரை சோதனை செய்தபோது ரூ.3,000/- இருந்தது. அப்பணம் குறித்து அவரை விசாரணை செய்தபோது, அவர் மேற்படி காருக்கு டீசல் போடுவதற்காக கொண்டு வந்தாகவும், பண கையிருப்பு புத்தகத்தில் பதிவு செய்துள்ளதாகவும் தெரிவித்தார். எனவே அப்பணம் அவரிடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மேலும் இன்று இரவு திரு.M.குமார், மோட்டார் வாகன ஆய்வாளர் பணிக்கு வந்தபோது தான் கை செலவிற்காக பணம் ரூ.1,700/- கொண்டு வந்ததாகவும், அதனை பண கையிருப்பு புத்தகத்தில் பதிவு செய்துள்ளதாகவும் தெரிவித்தார். அந்த பணத்தை போக்குவரத்து

(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.11/AC/2025/TVL U/s. 106 BNSS., r/w. 7 & 12 of the Prevention of Corruption (Amendment) Act - 2018 Continuous...)

செலவிற்காக கொண்டுவந்தாக தெரிவித்ததால் அந்த பணத்தை அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது. அவர் அமர்ந்திருந்த இடத்திற்கு அருகில் இருந்த வாகன சோதனை பூத் எண்-8-ன் உள்ளே திரு.S.செழியன், உதவியாளர் என்பவர் பணியிலிருந்தார். அந்த பூத்தினை மோட்டார் வாகன ஆய்வாளர் முன்னிலையில் சோதனை செய்தபோது, அதில் கணக்கில் வராத பணம் ரூ.1,29,600/- இருந்தது. அது குறித்து மோட்டார் வாகன ஆய்வாளர் மற்றும் உதவியாளர் ஆகிய இருவரிடமும் கேட்டபோது சரியான விளக்கம் அளிக்காததால் அந்த பணம் வாகன ஓட்டுநர்கள் மற்றும் வாகன உரிமையாளர்களிடமிருந்து லஞ்சமாக பெற்ற பணம் என கருதி கணக்கில் வராத மேற்கண்ட பணத்தை கைப்பற்றப்பட்டது. மேலும், அவரை சோதனை செய்தபோது அவரிடம் கையிருப்பு புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டிருந்த பணம் தவிர வேறு ஏதும் பணம் இல்லை. மேலும், பணிக்கு வரும்போது அவர் எடுத்து வந்திருந்த (TN 29 CB 4678-Hyundai Creta) காரை சோதனை செய்தபோது, அந்த காரிலும் பணமோ, பொருளோ எதுவும் காணப்படவில்லை. மேலும், சாவடி பூத்களுக்கு இடையே இருந்த இடைவெளியில் நிறுத்தப்பட்டிருந்த 3 இருசக்கர வாகனங்களை சோதனை செய்ததில், நடுவிலிருந்த Hero Splender TN 01 AX 5820 என்ற நீலநிற இருசக்கர வாகனத்தை சோதனை செய்ததில், அதன் டூல்ஸ் பாக்ஸில் செய்தித்தாள் பேப்பரில் 500 ரூபாய் கட்டுகள் 2 இருந்தது. அதனை எடுத்து நான் எண்ணிப்பார்த்ததில் ரூ.1,00,000/- ம் உள்ளது குறித்து மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.குமார் அவர்களை விசாரித்தபோது, மேற்படி வாகனம் மேற்படி சோதனைச்சாவடியில் தினக்கூலியாக வேலை பார்க்கும் மோட்டார் வாகன ஆய்வாளர் (தொ.நு.அ) திரு.ராஜன் அவர்களின் உறவினரான கார்த்திகேயன் என்பவரின் வாகனம் என்று தெரிவித்தார். அவர் தற்போது எங்கே என்று கேட்டபோது, மேற்படி நபர் நேற்றிரவு பணிக்கு வந்தவர் பாதியிலேயே சென்றுவிட்டார் என்றும், மேற்படி பணம் குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்று தெரிவித்தார். எனவே, மேற்படி பணம் ரூ.1,00,000/- ஆனது வாகன ஓட்டுநர்கள் மற்றும் உரிமையாளர்களிடமிருந்து பெற்ற லஞ்சப்பணமாக இருக்கக்கூடும் என கருதி அப்பணத்தை நான் கைப்பற்றினேன். மேலும், பூத் எண்-1-யை சோதனை செய்தபோது அதில் உள்ளே திரு.மனோஜ்குமார் (தனிநபர்) என்பவர் இருந்தார். அவரை விசாரித்தபோது தான் கடந்த சுமார் இரண்டு ஆண்டுகளாக இந்த சோதனை சாவடியில் பணியில் இருக்கும் மோட்டார் வாகன ஆய்வாளர்கள் கூறும் வேலைகளை செய்து வருவதாகவும், தனக்கு தினக்கூலியாக ரூ.500/- தருவார்கள் என்றும், தான் வாகனங்களுக்கு கணினியில் வாகனத்திற்கு தற்காலிக அனுமதி சீட்டு, இணக்க கட்டணம் மற்றும் பசுமை வரி வசூல் செய்யும் வேலையை செய்து வருவதாக தெரிவித்தார். அந்த பூத்தினை மோட்டார் வாகன ஆய்வாளர் முன்னிலையில் சோதனை செய்தபோது 25.09.2025-ந் தேதி காலை 08.00 மணிமுதல் இரவு 08.00 மணிவரை

**(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.11/AC/2025/TVL U/
106 BNSS., r/w. 7 & 12 of the Prevention of Corruption (Amendment) Act
2018 Continuous...)**

வாகன ஓட்டுநர்களிடமிருந்து தற்காலிக அனுமதி சீட்டு மற்றும் இனக்க கட்டணங்கள
வசூலிக்கப்பட்ட 29 ரசீதுகளின் தொகை ரூ.34,956/- ஆகும் என்றும், அதேபோன்று இ
08.00 முதல் விடியற்காலை 02.00 மணிவரை 16 ரசீதுகளின் வசூலிக்கப்பட்ட தொ
ரூ.33,034/- என விளக்கம் அளித்தார். ஆவணங்களை சரி பார்க்க சரியாக இருந்தது. என
அந்த பணம் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.குமார் அவர்களிடம் அரசு கணக்கி
செலுத்தமாறு கூறி திருப்பி அளிக்கப்பட்டது. மேலும், மேற்குறிப்பிட்ட ரசீதுகளின் விவரத்தை
கணினியில் பிரிண்ட் எடுத்து அதில் திரு.குமார் அவர்களை சான்றொப்பம் இடச்செய்து, நானும
கையொப்பம் செய்து விசாரணைக்காக கைப்பற்றினேன். மேலும், அந்த பூத்தை சோதனை
செய்தபோது அங்கு இருந்த மேஜை டிராயரில் இருந்து கணக்கில் வராத பணம் ரூ.5,900/-ம்
இருந்தது. மேலும், அவரை சோதனை செய்தபோது அவரிடம் பணம் ஏதுமில்லை. மேலும் தான்
TN 05 BJ 0707-Maruti Brezze என்ற காரில் வந்தாக தெரிவித்தார். அந்த காரை
சோதனை செய்தபோது, அந்த காரில் பணமோ, பொருளோ எதுவும் காணப்படவில்லை. மேலும்
பூத்தில் இருந்த கணக்கில் வராத பணம் ரூ.5,900/- பற்றி சரியான விளக்கம்
கொடுக்கபடாததால் வாகன ஓட்டுநர்கள் மற்றும் வாகன உரிமையாளர்களிடமிருந்து லஞ்சமாக
பெற்ற பணம் என முடிவு செய்து ஆக மொத்தம் உள்வருகை சோதனைச்சாவடியில்
ரூ.2,35,500/- (500X392, 200X110, 100X162, 50X18, 20X16, 10X8) பணத்தை
கைப்பற்றப்பட்டது. மேலும், மேற்கண்ட பூத்திற்கு நின்றுக்கொண்டு வாகனங்களை நிறுத்தி
வாகன ஓட்டுநர்களிடமிருந்து பணம் பெற்றுக்கொண்டிருந்த தனிநபரான திரு.B.சிவக்குமார்
என்பவரை பிடித்து விசாரித்தபோது தான் கடந்த 6 மாதமாக சோதனை சாவடிக்கு வந்து
பணியிலிருக்கும் மோட்டார் வாகன ஆய்வாளர்களுக்கு உதவியாக இருப்பதாகவும் அதற்காக
தனக்கு தினமும் ரூ.500/- சம்பளமாக தருவார்கள் என்றும், தான் மோட்டார் வாகன
ஆய்வாளர்களுக்கு டீ வாங்கி கொடுக்க உதவியாக இருந்து வந்ததாகவும் தெரிவித்தார்.
அவரை சோதனை செய்தபோது அவரிடம் பணம் ஏதுமில்லை. மேலும் திரு.D.ரமேஷ்
என்பவரை விசாரணை செய்தபோது தான் திரு.B.சிவக்குமார் அவர்களுடன் துணையாக
வந்ததாக தெரிவித்தார். அவரை சோதனை செய்தபோது அவரது பேன்ட் பாக்கெட்டில் ரூ.350/-
இருந்தது. அப்பணம் குறித்து அவரிடம் கேட்டபோது, சொந்த செலவிற்காக கொண்டு வந்தாக
தெரிவித்ததால், அந்த பணத்தை அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும்,
திரு.C.V.அஜ்ஜு என்பவரை விசாரணை செய்தபோது, தான் உதவியாளர் திரு.செழியன்
அவர்களது ஆக்டிவ் கார் டிரைவதாக வந்ததாகவும், தனக்கு கூலியாக ரூ.500/- கொடுப்பார்
என்றும் தெரிவித்தார். மேலும், அவரை சோதனை செய்தபோது அவரது சட்டை பாக்கெட்டில்
ரூ.20/- மட்டும் இருந்தது. மேற்படி நபர்களை விசாரித்து வாக்குமூலம் பெறப்பட்டது.

(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.11/AC/2025/TVL U/s. 106 BNSS., r/w. 7 & 12 of the Prevention of Corruption (Amendment) Act - 2018 Continuous...)

மேலும், மேற்படி நவீன ஒருங்கிணைந்த சோதனைச்சாவடியின் உள்வருகை சோதனைச்சாவடியின் அலுவலர்களின் வருகைப்பதிவேடு ஆகஸ்ட்/2025 மற்றும் பண கையிருப்பு பதிவேடு/2025 ஆகியவற்றை நகலெடுத்து அதில் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.குமார் அவர்களிடம் சான்றொப்பம் இடச்செய்து, அதில் நானும் கையொப்பம் செய்து கைப்பற்றினேன். இதற்கிடையே உள்வருகை சோதனை சாவடியின் மோட்டார் வாகன ஆய்வாளர் (தொ.நு.அ) திரு.ராம் கண்ணன் அவர்களும் அவரது குழுவினரும் காலை 08.00 மணிக்கு பொறுப்பை ஏற்றுக்கொள்ள அனுமதிக்கப்பட்டது. மேலும், வெளிச்செல்கை சோதனைச்சாவடியில் சோதனை நேரத்திற்குப்பின் அதாவது காலை 08.00 மணிக்குள் சாலை வரியாக வரிசை எண். 17-லிருந்து 20 வரையில் ரூ.17,974/- பணம் வசூல் செய்யப்பட்டது. எனவே மேற்படி வெளிச்செல்கை சோதனைச்சாவடியில் மொத்தம் ரூ.2,52,444/- பணம் அவர்களால் வசூல் செய்யப்பட்டது. மேலும், வெளிச்செல்கை சோதனைச்சாவடியின் அருகில் இருந்த Security அறைக்கு பின்புறம் சந்தேகத்திற்கு இடமாக நிறுத்தி வைத்திருந்த வாகன எண். TN 05 AU 0777- Yamaha FZ என்ற கருப்பு நிற இருச்சக்கர வாகனம் குறித்து முதலில் மோட்ட வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் ஆஜரில் இருந்த நபர்களிடம் விசாரித்தபோது அது தங்களுடையது அல்ல என்று கூறியதாலும், அதனுடைய சாவி எதுவும் இல்லாததால் மேற்கொண்டு சோதனை செய்ய இயலவில்லை. பின்னர் வந்த இரகசிய தகவலின்படி மேற்படி வாகனமானது, திரு.தமிழ்செல்வன் என்பவருடையது என்றும், அந்த வண்டியின் இருக்கையின் அடியில் பணம் மறைத்து வைக்கப்பட்டிருப்பதாக கிடைத்த நம்பகமான தகவலின்பேரில் மீண்டும் திரு.தமிழ்செல்வன் அவர்களை மீண்டும் விசாரிக்க அவர் மேற்படி வண்டி தன்னுடைய என்றும், அதனுடைய சாவியையும் எடுத்து ஆஜர் செய்தார். அந்த வாகனத்தை சோதனை செய்ய இருச்சக்கர வாகனத்தின் இருக்கையின் அடியில் பணம் கத்தையாக இருந்தது. அதை எடுத்து எண்ணிப்பார்க்க ரூ.90,000/- (ரூ.500x176, 200x8, 100x4) இருந்தது. அந்த பணத்தை குறித்து திரு.தமிழ்செல்வன் அவர்களை விசாரித்தபோது அந்த பணம் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.ராஜன் அவர்கள் வைத்திருக்கும்படி நேற்று 25.09.2025 ஆம்தேதி மாலை கொடுத்த பணம் என்று தெரிவித்தார். திரு.ராஜன் அவர்களை அந்த பணம் குறித்து விசாரிக்க அவர் அந்த பணம் குறித்து எதுவும் தெரியாது என்று தெரிவித்ததால், மேற்படி பணம் லஞ்ச பணமாக இருக்ககூடும் என்று கருதி பணம் ரூ.90,000/-த்தை கைப்பற்றினேன். மேலும், இத்தினர் கூட்டுச்சோதனையில் இரண்டு சோதனைச்சாலையிலும் மொத்தம் ரூ.5,44,500/- (500X911, 200X259, 100X307, 50X113, 20X33, 10X19) பணத்தை கணக்கில் வராத லஞ்சப்பணம் என முடிவு செய்து கைப்பற்றப்பட்டது. மேற்குறிப்பிட்ட இரண்டு சோதனைச்சாவடிகளிலும் லஞ்சம் சம்மந்தமான

(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.11/AC/2025/TVL U/s 106 BNSS., r/w. 7 & 12 of the Prevention of Corruption (Amendment) Act 2018 Continuous...)

பலகையோ. ஸ்டிக்கரோ ஏதும் இல்லை. அதனை மக்கள் பார்வைக்கு தெரியும் அளவிற்கு போர்டு வைக்க அறிவுறுத்தப்பட்டது. இத்திடீர் கூட்டுச்சோதனை மேற்கொண்டபோது, உடமைகளுக்கோ, பொருட்களுக்கோ, ஆவணங்களுக்கோ எந்தவிதமான பாதிப்போ, சேதாரமின்றி அந்தந்த பொருட்களை அந்தந்த இடத்திலேயே வைக்கப்பட்டது. மேற்படி இருதுறை திடீர் கூட்டுத்தணிக்கை தொடர்பாக, செயல்முறை ஒன்றை, அலுவலகத்திலிருந்து கொண்டுவரப்பட்ட மடிக்கணினி மூலம் நான் சொல்ல சொல்ல காவல் ஆய்வாளர் திருமதி.தமிழரசி அவர்களால் தட்டச்சு செய்யப்பட்டு, அலுவலகத்திலிருந்து கொண்டுவரப்பட்ட பிரிண்டரில் பிரிண்ட் எடுக்கப்பட்டது. மேற்படி செயல்முறையானது, இன்று 26.09.2025-ந்தேதி காலை சுமார் 02.00 மணிக்கு தொடங்கி 13.00 மணிக்கு முடிக்கப்பட்டது. SdXXXவி.கணேசன், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு & கண்காணிப்பு பிரிவு, இராணிப்பேட்டை, (பொ.) திருவள்ளூர். ஜி.எஸ்.தமிழரசி காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு & கண்காணிப்பு பிரிவு, திருவள்ளூர், D.ராஜன், மோட்டார் வாகன ஆய்வாளர் (தொ.நு.அ), பெத்திக்குப்பம் நவீன ஒருங்கிணைந்த சோதனை சாவடி, வெளிநடப்பு சோதனை சாவடி, எளாவூர், திருவள்ளூர் மாவட்டம். S விஜயலட்சுமி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு & கண்காணிப்பு பிரிவு, இராணிப்பேட்டை. எம்.குமார், மோட்டார் வாகன ஆய்வாளர் (தொ.நு.அ), பெத்திக்குப்பம் நவீன ஒருங்கிணைந்த சோதனை சாவடி, உள்வருகை சோதனை சாவடி, எளாவூர், திருவள்ளூர் மாவட்டம் & போ.கமலக்கண்ணன், மண்டல துணை வட்டாட்சியர், காஞ்சிபுரம். & மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், காஞ்சிபுரம், செங்கற்பட்டு & திருவள்ளூர் மாவட்டங்கள், காஞ்சிபுரம்.

Honoured Sir, I received the above letter of the Deputy Inspection Cell Officer along with Proceedings and unaccounted cash Rs.5,44,500/- and attested copy of connected documents and registered a case in Thiruvallur V&AC, Cr.No.11/AC/2025/TVL, U/s. 106 BNSS., r/w. 7 & 12 of The Prevention of Corruption (Amendment) Act, 2018 on 26.05.2025 at about 15.15 hrs. The original FIR, Complaint along with the Joint Surprise Check Proceedings of District Deputy Inspection Cell Officer, Statements, Self explanations, attested copy of office records and seized un-accounted/un-explained bribe amount Rs.5,44,500/- at Pethikuppam Model Integrated RTO Check Posts, Elavur, Thiruvallur District during the Joint Surprise Check, are submitted before the Hon'ble Principal District and Sessions Judge, Thiruvallur and other copies are forwarded to superior officers concerned.

26/9/2025

(G.S.TAMIZHARASI),
Inspector of Police,
Vigilance and Anti-Corruptiion,
Thiruvallur.